NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப்பத்திரிகை

வேணு : 13 நவம்பர் 2007 கானம் : 4

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhuramurali.*

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 142 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 8 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | ... | 11 |
| 5. | மனம் போல் வாழ்வு | ... | 13 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை-114 | ... | 16 |
| 7. | மாலே மணிவண்ணா -56 | ... | 17 |
| 8. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் (சென்ற இதழ் தொடர்ச்சி) | ... | 19 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-140 | ... | 21 |
| 10. | செய்திகள் | ... | 23 |

**வாசகர்களுக்கு
இதயங்கனிந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்**

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

**ராகம் : அடாணா** **தாளம் : த்ரிபுடை**

**பல்லவி**

*எந்நேரமும் எந்தன் நாவினில் உந்தன் நாமம்*
*இருக்க வேண்டும் ஐய்யா முரளீதரா! (எந்நேரமும்)*

**அனுபல்லவி**

*கள்ளன்தான் வந்திடினும் காலன்தான் வந்திடினும்*
*சொல்லத் தெவிட்டாத உந்தன் நாமம் (எந்நேரமும்)*

**சரணம்**

*பாகவதோத்தமர்கள் ஏற்றிடும் நாமம்*
*சாகா வரமும் நல்கிடும் நாமம்*
*மங்களமெல்லாம் தந்திடும் நாமம்*
*முரளீதர என்னும் உந்தன் நாமம் (எந்தநேரமும்)*

**நாமாவளி**

ஜய் ஜய் கோவிந்த ஜய் ஹரி கோவிந்த

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**
*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

**142**

சமீபத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், வேலூர் அருகிலுள்ள ஆம்பூருக்குச் சென்றிருந்தார்கள். ஆம்பூர், சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா சார்பில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயில் மற்றும் பல இடங்களில் மஹாமந்திர நாமகீர்த்தனம், ஸத்சங்கம் முதலியவை நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. திரு வி. குமரேசன், திரு எம். மோகன்குமார், மகளிர் மண்டலியைச் சேர்ந்த திருமதி குமுதா, திருமதி அம்சவேணி மற்றும் பல பக்தர்கள், பக்தி ஈடுபாட்டுடன், அந்தப் பகுதியில் எல்லோருக்கும் மஹாமந்திர கீர்த்தனத்தின் பலன் சென்றடைய வேண்டும் என்று ஒரே மூச்சாக நாமகீர்த்தனம் செய்து வருகின்றார்கள். இதுபோல், தமிழகத்தில் பல இடங்களில் நமது சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ராவினர் இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இருப்பதால் மஹாமந்திர கீர்த்தனம் தமிழகத்தில் அநேகமாக எல்லா இடங்களிலும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், அக்டோபர் 10-ஆம் தேதியன்று ஆம்பூருக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது, திரு குமரேசன் அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் ஆம்பூரில், மஹாமந்திரம் சொல்வதால் அவரவர் வாழ்க்கையில் வியக்கத்தக்க அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன என்று அவற்றை சொல்லிக்கொண்டு வந்தார். இதைக் கேட்ட ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், அவரிடம், ''நம் கேந்த்ரா அலுவலகத்திற்கு தினமும் தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும், நாம அனுபவங்களை பக்தர்கள் தெரிவித்து வருகின்றார்கள். அதைக் கேட்பதற்கும், படிப்பதற்கும் மிகவும் சந்தோஷமாக இருக்கும். நீங்கள் சொன்ன பக்தர்களின் அனுபவங்களை அவர்கள் வாயிலாக நேரிலேயே கூற கேட்கலாமே!'' என்று விருப்பம் தெரிவித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் எண்ணத்தை திரு. குமரேசன் உடனே பக்தர்களிடம் தெரிவிக்க, நிறைய பக்தர்கள் தங்கள் அனுபவத்தைக் கூற

முண்டியடித்துக்கொண்டு வந்தார்கள். இதைப் பார்ப்பதற்கே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. குடியாத்தம் திரு. மாணிக்கம், சாந்தியம்மாள், தமிழ் திருமால், கே. ஏகாம்பரம், மோகனா, சுரேஷ், திருமதி அமுதா, ஆம்பூர் V. குமரேசன், எம். மோகன்குமார், திருமதி குமுதா, திருமதி அம்சவேணி, திருமதி பத்மா, திருமதி புவனேஸ்வரி, திரு ஜெயகுமார், திருமதி இந்திரா ஆகியோர் மஹாமந்திரத்தை நம்பிக்கையுடன் கூறிவருவதால் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்கள். ஒவ்வொருவரும் சொன்ன விஷயங்கள் மிகவும் அதிசயிக்கத்தக்கதாக இருந்தது. இவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், மிகவும் நெகிழ்ந்துவிட்டார்கள். அதில், குடியாத்தம் சாந்தியம்மாள் அவர்கள் கூறியது, எல்லோர் நெஞ்சையும் உருக்குவதாக அமைந்திருந்தது.

அவர் ஒரு சராசரி கிராமத்துப் பெண்மணி; ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார். நம்பிக்கையுடன் மஹா மந்திரத்தை சொன்னதால் ஏற்பட்ட அனுபவத்தை அவர் பின்வருமாறு விவரித்தார்.

‘‘நான் குடியாத்தம் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கின்றேன். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளை தொலைக்காட்சியில் தினமும் கேட்டு வருவேன். அவர்களை அப்பொழுது நேரில் நான் தரிசனம் செய்ததில்லை. ஒரு கோயிலுக்குச் செல்வது என்றால் எப்படி செல்வோமோ அதுபோல், விடியற்காலையில் எழுந்து, குளித்து, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரைகள் ஆரம்பிக்கும்பொழுது, தொலைக்காட்சி முன்பாக, அவரை நேரில் வணங்குவதுபோல் வணங்குவேன். என்றைக்காவது அவர்களை நேரில் தரிசனம் செய்ய மாட்டோமா என்ற ஏக்கம் எப்பொழுதும் என்னுள் இருக்கும். ஒரு சமயம், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் குடியாத்தத்திற்கே விஜயம் செய்து, நாமகீர்த்தனம் செய்தார்கள். அப்பொழுது பெரும் திரளான மக்கள் அதில் கலந்துகொண்டனர். பலர், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களைச் சுற்றி இருந்ததால் தூரத்திலிருந்தே அவர்களை தரிசனம் செய்தேன்.

அதன்பின், சில காலம் கழித்து ஆம்பூரில் ஒரு பக்தரின் இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருப்பதை அறிந்து நானும் அங்கு சென்றேன். நான் ஸ்வாமிஜியை தரிசித்து ஒரு ஓரமாக நின்று கொண்டேன். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களைச் சுற்றிலும் பல பக்தர்கள் இருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் அருகே செல்வதற்கும் தயக்கம். எப்படியாவது நம் மனதில் உள்ளவற்றை அவர்களிடம் கொட்டி விடமாட்டோமா? அந்த பாக்கியம் கிடைக்காதா? என்ற ஒரு ஏக்கம். என் மனதில் நான் இப்படி தவித்துக்கொண்டிருந்த பொழுது, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திடீர் என்று என் பக்கம் பார்த்து, இரு புருவங்களை உயர்த்தி, ‘‘என்ன?’’ என்று கேட்பதுபோல் இருந்தது. பிறகு, விரலசைத்து என்னை கூப்பிட்டார்கள். அவர்கள் கூப்பிடுவது நம்மைதானா? என்று தயங்கி தயங்கி சென்ற நான், என் மனதில் உள்ள சங்கடங்களை அவர்களது பாதத்தில் கொட்டி அழுது விட்டேன்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனுக்குத் திருமணமாகி ஒரு பேரக் குழந்தையும் உண்டு. என் மகனுக்கும் மருமகளுக்கும் இடையே சிறிய சச்சரவு ஏற்பட்டு மருமகள் பேரக் குழந்தையுடன் பிறந்த வீடு சென்று விட்டாள். நீதிமன்றத்தில் விவாகரத்து வரை சென்றுவிட்டது அவர்களது பிரச்சனை. பேரக் குழந்தை மீதும், மருமகள் மீதும் எனக்கு அளவு கடந்த பாசம். விவாகரத்துவரை போயிருப்பதால் துக்கம் தாங்க முடியவில்லை. எப்படியாவது பிரிந்த குடும்பம் சேரவேண்டும் என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் அழுது தீர்த்துவிட்டேன்.

இத்தனையையும் பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ‘‘என் படத்தை வைத்து மஹாமந்திரத்தை பதினொரு நாட்கள் சொல்லி வா! அவர்கள் சேர்ந்துவிடுவது உறுதி’’ என்று சொல்லி சென்றுவிட்டார்கள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. யாரிடம் படத்தைப் பெற்றுக்கொள்வது என்றும் தெரியவில்லை. ஊருக்குத் திரும்பினேன். என்னிடம், ‘‘ஹரே ராம...’’ ஸ்டிக்கர் ஒன்றுதான் இருந்தது.

அதில் ஒரு மூலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் படம் இருந்தது. அதற்கு முன் ஒரு விளக்கை ஏற்றி, காலையிலும், மாலையிலும், ''ஹரே ராம...'' மஹாமந்திரத்தை பக்தியுடனும் நம்பிக்கையுடனும் சொல்லி வந்தேன். எனக்கு ஒரு தெம்பும் வந்தது. ''எல்லோரிடமும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சொன்னபடி நான் மஹாமந்திரம் சொல்கிறேன். என் மருமகளும், பேரக் குழந்தையும் சேர்ந்துவிடுவார்கள்'' என்றேன். அவர்கள், என்னைப் பார்த்து, ''என்ன! பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு? விவாகரத்து வரை சென்றுவிட்ட வழக்கு இது. எப்படி ஒன்று சேருவார்கள்'' என்று கேலி செய்தனர். ஆனால், நான் நம்பிக்கையுடன், ''ஸ்ரீ ஸ்வாமிஜி சொல்லியிருக்கிறார், நிச்சயம் நடக்கும்'' என்று பதில் சொன்னேன்.

ஒரு வார காலம் சென்றது. எட்டாவது நாள் மாலையில் மஹாமந்திரம் சொல்லி முடித்தபொழுது, எனது மகன், ''அம்மா, அம்மா இங்கே வாயேன்! யார் வந்திருக்கிறார்கள் என்று பார்?'' என்றான். நானும் ஓடோடி வாசலில் வந்து பார்த்தேன். எனது கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. மருமகளும், பேரக் குழந்தையும் வந்திருந்தனர். அவர்களை உள்ளே அழைத்து அமரச்சொல்லி விசாரித்தேன்.

எனது மருமகள், பேரக் குழந்தையுடன் அந்த ஊரில் ஒரு துக்கம் கேட்பதற்கு வந்திருந்தார்களாம். குழந்தை அங்கு இரவு தங்கக்கூடாது என்று சிலர் சொல்ல, என்ன செய்வது? என்று செய்வதறியாமல் வியக்க, அப்பொழுது, ''உன் மாமியார் வீடுதான் இங்கே இருக்கே. அங்கு போய் தங்கிக்கொள்'' என்று அதட்டும் குரலில் ஒருவர் கூறினதைக் கேட்டு வந்திருப்பதாக சொன்னாள். அன்று முதற்கொண்டு எனது மகனும் மருமகளும் சமாதானமாகி விவாகரத்து வழக்கை வாபஸ் பெற்று இன்று நிம்மதியாக வாழ்கின்றனர். மஹாமந்திரத்தை ஒரு வாரக்காலம் சொன்னதற்கு நடக்குமா என்று அனைவரும் நினைத்த நிகழ்ச்சியும் என் வாழ்வில் நடைபெற்றது, நிச்சயம் மஹாமந்திரத்தை நான் சொன்னதாலும் அதை எனக்குக் கொடுத்த ஸத்குருநாதரின் அருளினாலும்தான்! அன்றிலிருந்து மஹாமந்திரத்தை விடாமல் சொல்லி வருகின்றேன்.

சமீபத்தில், குடியாத்தத்தில் 48 மணி நேரம் மஹாமந்திர அகண்ட நாமகீர்த்தனம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு வீட்டிற்கு வந்தோம். சற்று நேரத்திற்கெல்லாம் கதவு தட்டும் சத்தம் கேட்டது. யாரது என்று திறந்து பார்த்தபொழுது, 'இலவச வீட்டு மனை பட்டா உங்களுக்கு தர இருக்கின்றார்கள். நாளை வந்து பெற்றுக்கொள்ளலாம்' என்று அரசு அதிகாரிகள் கூறினதைக் கேட்டதும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். மஹாமந்திரம் சொல்ல ஆரம்பித்திலிருந்து என் வாழ்வில் மகிழ்ச்சியே நிலவுகிறது.''

இவ்வாறு அந்த அம்மையார் தனது எளிய நடையில் தன் அனுபவத்தை அழுதுகொண்டே சொன்னதைக் கேட்ட அனைவரும் மனம் உருகிவிட்டார்கள்.

**(தொடரும்)**

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை தபால் தலை ஒட்டிய உறைமீது ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

9-11-07 அன்று ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு திருக்கல்யாண உத்ஸவம் நடைபெற உள்ளது. பங்குகொள்ள விரும்புபவர்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : எனக்குக் கடவுள் மீதும், இறை வழிபாடு மீதும், பிரார்த்தனைகள் மீதும் எப்பொழுதும் நம்பிக்கை உண்டு. இறை வழிபாட்டை சாதனையாக செய்ய விருப்பம் கொண்டிருந்த போதும், நான் அதைத் தொடர்ந்து, ஒழுங்காக செய்வதில்லை. ஒரு இறை வழிபாட்டை ஆரம்பித்துச் செய்வேன். ஆனால், சில காலத்திற்குள் அதில் ஆர்வம் இழந்துவிடுவேன். இது சரியான பழக்கம் அல்ல என்று தெரிந்து இருந்தாலும் அதுதான் வழக்கத்தில் இருக்கின்றது. நான் என்னை திருத்திக்கொள்ள விரும்புகின்றேன். என்னுடைய வழிபாட்டு முறையை ஒழுங்காக விடாமல் செய்ய விரும்புகின்றேன். எனக்கு இறையருள் கிடைக்க வழி கூறுங்கள்?*

பதில் : நேரம் கிடைத்தபொழுதெல்லாம் மஹாமந்திர கீர்த்தனத்தை செய்து வரவும். அதுவே போதுமானது. அதை எவ்வாறு சொல்கின்றோம், எப்படி சொல்கின்றோம் என்ற எந்த கவலையும் வேண்டாம். மனது ஈடுபடுகின்றதா, அல்லது ஈடுபடவில்லையா என்று கூட எண்ண வேண்டாம். உங்கள் வாயிலிருந்து வரும் மஹாமந்திர கீர்த்தனத்தைக் கேட்டவுடன், இறைவன் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றான். அவன் மகிழ்ச்சி அடைந்தால் எதைத்தான் தரமாட்டான். இறையருளைப் பெறுவதற்கான மிக சுலபமான வழி மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்வதே!

*கேள்வி : குருவிற்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை எது?*

பதில் : ஒரு குழந்தை தன் பெற்றோருக்கு அளிக்கக்கூடிய தலை சிறந்த காணிக்கை அன்பும் அவர்களுக்கு கீழ்ப்படிதலும்!

ஒரு மாணவன் தன் ஆசிரியருக்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை ஒழுக்கத்துடன் கூடிய சாதனை!

ஒரு குடிமகன் தன் நாட்டிற்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை, எல்லா வழிகளிலும் தம்மை நாட்டிற்கு பயனுள்ளதாக மாற்றிக்கொள்வது!

ஒரு மருத்துவர் தன்னை அண்டி வந்த நோயாளிக்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை தக்க சமயத்தில் தக்க மருந்தைத் தருவது!

ஒரு நண்பன் தன் நண்பனுக்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை இடுக்கண் வரும்பொழுது அவனுக்கு உதவுவது!

தம்பதிகள் தங்களுக்குள் அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை ஒருவரை ஒருவர் முழுவதும் புரிந்துகொள்வது!

ஒரு கலைஞனுக்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை அவனது கலையைப் பாராட்டுவது!

ஒரு பக்தன் தன் தெய்வத்திற்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை எதிர்பார்ப்பே இல்லாத தூய்மையான அன்பே!

ஒரு சீடன் தன் குருவிற்கு அளிக்கக்கூடிய தலைசிறந்த காணிக்கை குருவருளுக்கு ஈடு, இணை எதுவும் இல்லை என்று உணர்வதே!

***கேள்வி : ராம, க்ருஷ்ண அவதாரங்கள் பூர்ணமான அவதாரங்களா? அந்த இரண்டு அவதாரங்களும் மட்டும் பூர்ணமான அவதாரங்கள் ஏன்?***

பதில் : பண்டிதர்களான மக்களிடம், தெய்வம் உண்டு என்றால், ‘‘நீங்கள் எப்படி சொல்கின்றீர்கள்? வேதத்தில் எங்கு சொல்லி இருக்கின்றன?’’ என்றெல்லாம் கேட்பார்கள். அப்படி சொல்லியிருக்கின்றது என்றால், ‘‘அப்படி ஒருவரால் வாழமுடியுமா?’’ என்பார்கள். ராமாவதாரத்திலே பகவான் எந்த அற்புதத்தையும் காண்பிக்காமல் தான் வாழ்ந்த முறையினாலேயே தன் தெய்வத் தன்மையை நிலை நாட்டினார். வேறு சில மக்களோ தெய்வம் உண்டு என்பதை ஏதாவது அற்புதத்தின் மூலம் காட்டினால்தான் ஏற்றுக் கொள்வார்கள். பகவான் க்ருஷ்ணன் அத்புத பாலகனாக, பிறந்தது முதல் பல அத்புதங்கள் காட்டினான்.

வாழ்க்கை முறையின் தெய்வீகத் தன்மையை நிரூபித்த ராமனுக்கு பத்தாயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டன. அத்புத பிரபாவத்தால் தன் தெய்வீக தன்மையை நிலைநாட்டிய பகவான் க்ருஷ்ணனுக்கு நூற்று இருபத்து ஐந்து வருடங்கள் போதுமானதாக இருந்தது.

***கேள்வி : கோலோகம் என்பது ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கக் கூடிய ஒரு இடமா?***

பதில் : கோலோகம் என்பது ஸ்ரீவைகுண்டத்தைக் காட்டிலும் உயர்ந்தது. க்ருஷ்ண பக்தர்களுக்கு மட்டுமே அங்கு இடம் உண்டு.

## புதிய வெளியீடுகள்

**நூல்கள் :**

1. Simple Questions & Simple Answers
2. நூற்றுக்கு நூறு
3. இதயத்துடன் ஓர் இதமான வருடல்
4. கலிதர்ம உந்தியார்
5. ஸனாதனப் புதிர்
6. துளஸீ தளங்கள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil :**
**Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. From Goodness to Godliness through Mahamantra Kirtam | DVD, Audio CD |
| 2. துளஸீ தளங்கள் | Audio CD |
| 3. ஸந்த் நாமதேவர் | Audio CD, Cassette |
| 4. ஸந்த் துக்காராம் | Audio CD, Cassette |
| 5. ஸ்ரீ க்ருஷ்ண லீலா | Audio CD |
| 6. கலிகால உசிதம் தர்மம் - 2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Cassette, Audio CD |
| 7. மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை-2007 (தமிழில்) | VCD |
| 8. MahaMantra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிய **'கலிதர்ம உந்தியார்'** | Cassette, Audio CD |
| 2. **மஹாமந்திர கீர்த்தனம்** -ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மதுரமான குரலில் | Cassette, Audio CD |
| 3. **பஞ்ச கீதங்கள்** | Cassette, Audio CD |

| | |
|---|---|
| H.H. Sri Sri Muralidhara Swamiji's 'Kali Dharma Undhiyar' (Lecture in English) by Dr. A. Bhagyanathan (Live Recording) | MP3, Audio CD |

***Contact :***

Ph : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# மாதம் ஒரு புத்தகம்

மஹான்களின் திவ்ய சரித்திரங்களை விவரிக்கும் நூல்களுள் ஒரு தனித்துவம் வாய்ந்த தலைசிறந்த நூல் மஹேந்த்ரநாத் குப்தா அவர்கள் எழுதியுள்ள ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் அமுத மொழிகள் - "The Gospel of Sri Ramakrishna".

குருதேவர் ஸ்ரீ ராமக்ருஷ்ணரின் சீடர்களுள் மிகவும் முக்கியமானவர் 'ம' என்று தம்மை அழைத்துக்கொண்ட ஸ்ரீ மஹேந்த்ரநாத் குப்தா அவர்கள். இவர், தான் குருதேவரை தரிசித்த பொழுதெல்லாம் அவரது திவ்ய சன்னிதானத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை எல்லாம் அப்படியே தனது எழுத்துக்களில் படம் பிடித்து, படிக்கும் ஒவ்வொருவரையும் தக்ஷிணேஸ்வரத்தில் உள்ள குருதேவர் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் வாழ்ந்த அந்த சிறிய அறைக்கு அழைத்துச் சென்று, குருதேவரின் திருவடி நிழலில் அமர்த்தி விடுகின்றார்.

சுவாமி விவேகானந்தர் இதைப் படித்துவிட்டு, ''குருதேவரின் வாழ்க்கையை எங்களில் ஒருவரும் எழுத முற்படாமைக்கு, முயலாமைக்குக் காரணம் எனக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இந்தப் புனிதக் காரியம் உங்களுக்காகவே ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. அவர் உங்களில் வாழ்ந்து வருகின்றார். இதில் சந்தேகம் இல்லை'' என்று மிகவும் பாராட்டி கூறியுள்ளார்.

முதன்முதலில் குருதேவரை தரிசித்தபொழுது நிகழ்ந்த சம்பவங்களை ஒளிவுமறைவின்றி மிகவும் சுவாரஸ்யமாக குறிப்பிடுகின்றார். அவற்றை அவர்கள் எழுதும்பொழுது, உருவ வழிபாட்டைப் பற்றிப் புரிந்துகொள்ளாத நிலையில் தாம் குருதேவரிடம் வாதிட்டு தமது அகங்காரம் அடி வாங்கியதை தாமே ஒப்புக்கொண்டு எழுதியுள்ளார்.

''களிமண்ணால் ஆன உருவத்தை வைத்துப் பூஜை செய்பவர்களுக்கு முதலில் அது களிமண் தான், கடவுள் அல்ல என்பதை எடுத்துக் கூற வேண்டும். அதோடு அந்த உருவத்தில் இறைவனை நினைத்துதான் பூஜை செய்யவேண்டுமே தவிர களிமண்ணுக்குப் பூஜை செய்வது சரியன்று'' என்று 'ம' அவர்கள் குருதேவரிடம் சொல்கின்றார்.

இதைக் கேட்டு வெறுப்படைந்த ஸ்ரீ ராமக்ருஷ்ணர், கடுகடுத்த முகத்தோடு, ''கல்கத்தாவாசிகளாகிய உங்களுக்கு இது ஒரு பொழுதுபோக்காகி விட்டது. சொற்பொழிவு செய்வதும், தம் கருத்தைப் பிறருக்குத் தெளிய வைப்பதும் உங்களுக்கு ஒரு தொழிலாகவே போய்விட்டது. உண்மையை அறிவது எப்படி என்று யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இந்த லக்ஷணத்தில் பிறருக்கு போதிக்க வந்துவிடுகிறீர்கள். இந்த புவனங்கள் அனைத்தையும் எவன் தோற்றுவித்தானோ அவன் ஒவ்வொருவருக்கும் உண்மையை உணர்த்துவான். சூரியன், சந்திரன், மனிதர்கள், விலங்குகள், மற்றுமுள்ள ஏனைய உயிர்கள் அனைத்தையும் எவன் படைத்தானோ, எவன் இவை அனைத்தும் நிலைபெற்று வாழ்வதற்கு, தாய் தந்தையர்களைப் படைத்து, அவர்களிடம் மக்கட்பாசத்தையும் வைத்தானோ, அவனே, அந்த இறைவனே, உண்மையை உணர்த்துவதற்கு உரியவன்.

இவ்வளவையும் செய்து கொடுத்த இறைவன், மக்கள் தன்னை வழிபடுவதற்குரிய வழிகளைக் காட்டாமல் போவானா? நமக்குள்ளே இருந்துகொண்டு நம்மை நடத்திச் செல்பவன் அவனன்றோ? உண்மையை அறிய வேண்டும் என்ற தேவை, நாட்டம் ஏற்படும்பொழுது அவனே ஆசானாக வந்து போதிப்பான். நம் அந்தராத்மாவிற்கு அவனே நல்ல துணைவன். மண்ணுருவை வழிபடுவது தவறாக இருந்தால் ஆண்டவனாகிய அவனுக்கு அது தெரியாதா என்ன? தன்னைத்தான் அந்த மண் வடிவில் வழிபடுகின்றார்கள் என்பதை அவன் அறியமாட்டானா? அவனை நாம் வழிபடுகின்றோம் என்ற ஒன்றே அவனுக்கு மகிழ்ச்சியைத் தருமே!

உனக்கு ஏன் இந்த தலைவலியெல்லாம்! ஞானமும் பக்தியும் பெறுவதற்கு உன்வரை வழி என்ன என்று பார்த்து அதற்கு முயற்சி செய் என்று குருதேவர் 'ம' அவர்களிடம் பதில் கூறியதாகக் குறிப்பிடுகின்றார். இது நம் எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

இவ்வாறு, ரஸமான பல பொக்கிஷங்கள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

**- டாக்டர் ஆ. பாக்யநாதன்**

# மனம் போல் வாழ்வு - 1

*(சென்னையில் 2007 ஜனவரி 4-7 தேதிகளில் நடைபெற்ற 59வது* ANCIPS *2007 கருத்தரங்கில்* (59th Annual National Conference of the Indian Psychiatric Society) *வெளியிடப்பட்ட ஆண்டு மலரில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ''மனம் போல் வாழ்வு'' கட்டுரை இடம் பெற்றுள்ளது. நாம் அனைவரும் பயன்பெறும் வகையில் அகில இந்திய மனநல கருத்தரங்கின் மூத்த மனநல நிபுணர் டாக்டர்* M. *திருநாவுக்கரசு அவர்களின் அனுமதியுடன் இங்கே பகிர்ந்துகொள்கிறோம்.)*

- சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா

இன்றைய காலகட்டத்தில் ஆன்மீகம், இறைவழிபாடு போன்றவை, மாறிவரும் மனிதனின்ம நவீனமான வாழ்க்கை முறைகளுக்கும், அதிவேகமாக நிகழ்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் எதிர்மறையான விஷயங்கள் என்பது போன்ற ஒரு பரவலான அபிப்ராயம் நிலவி வருவதைக் காணலாம். ''இது உண்மைதானா?'' என்றால் நிச்சயமாக இல்லை! சரியாகப் புரிந்து கொண்டால் எல்லா காலகட்டங்களிலும் எல்லா மனிதர்களின் வாழ்க்கைகளிலிருந்தும் பிரிக்க முடியாத அத்தியாவசியமான ஒன்று ஆன்மீகம் என்பதை உணரலாம்.

மனிதன் என்பவன் மற்ற உயிரினங்களிலிருந்து எந்த விதத்தில் வேறுபடுகின்றான் என்று பார்க்கும்பொழுது, மற்ற உயிரினங்கள் ஓர் அறிவு முதல் ஐந்து அறிவு வரை உடையனவாகக் காணப்படுகின்றன. சுவைத்தல், பார்த்தல், கேட்டல், முகர்தல், உணர்தல் போன்ற ஐந்து புலன்களின் செயல்கள் பூர்த்தியாகக் கொண்ட மனிதன் மட்டும், அவற்றினுடைய செயல்களை இன்னும் திறன்பட சிந்திக்கும் அறிவாக, ஆறாவது அறிவைக் கொண்டுள்ளான். மனிதன் என்பவன் உடல், அறிவு, மனது (உணர்வு) இவற்றினுடைய ஒரு கலவை.

குழந்தையை, தாய் கருவுற்றது முதல், நவீனமான கருவிகளைக்கொண்டு அக்குழந்தையின் உடல் வளர்ச்சியானது மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. அந்த கருவிகளின் மூலம், குழந்தையின் ஊனம் கருவிலேயே கண்டுபிடிக்கப்பட்டால்

அப்பொழுதே அந்த ஊனத்தை அழித்து விடுகிறார்கள். குழந்தை பிறந்தவுடன், ஒரு குழந்தைநல மருத்துவர் அந்தக் குழந்தைக்கு பார்வை, கேட்கும் சக்தி எல்லாம் சரியாக உள்ளனவா? என்பதை ஒருமுறை பார்த்துக்கொண்டு, தற்காப்பு நடவடிக்கையாகக் காசநோய், போலியோ போன்றவற்றிற்குத் தடுப்பூசி போட்டு விடுகின்றார். பிறகு ஐந்து வயதுவரை குழந்தைக்கு மிகவும் சத்தான உணவுகள் கொடுக்கிறார்கள். பிறகு, பள்ளிக்கூடத்தில் சேர்த்து அந்தக் குழந்தையின் அறிவைப் பெருக்குவதற்கு முயற்சிகள் எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக எந்தத் துறையில் அந்தக் குழந்தைக்கு நாட்டமோ, எந்தத் துறையை எடுத்துக்கொண்டால் அந்தக் காலத்திற்கு ஏற்றாற்போல் அதிகமாகப் பொருள் ஈட்டலாமோ, எந்தத் துறையை எடுத்தால் சமுதாயத்தில் ஒரு நல்ல மதிப்பு கிடைக்குமோ அந்தத் துறையில் ஆர்வத்துடன் ஊக்கப் படுத்துகிறார்கள். இவை இரண்டுடன், 'உடல் ஆரோக்கியம்' அறிவு வளர்ச்சி, மனிதனுடைய தேவைகள் முடிந்துவிடுகின்றன என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மை என்ன?

இவை இரண்டுடன் மனிதனுடைய தேவைகள் முடிந்து விடுவதில்லை. அதுதான் உண்மை! அப்படியானால் மூன்றாவது தேவை என்ன? அந்த அத்தியாவசியமான மூன்றாவது தேவைதான் மனவலிமை. மனதிற்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? அதன் ஆற்றல்தான் என்ன? என்கின்றீர்களா! இறைவனின் படைப்பிலேயே மிக மிக ஆச்சரியமானது என்ன வென்றால் அது இந்த மனம்தான்.

வெளியில் காணப்படும் பிரபஞ்சத்தை தங்கள் அறிவினால் தீவிரமாக ஆராய்ச்சி செய்து இன்றைய விஞ்ஞானிகள் செவ்வாய் கோளுக்கு Path Finderஐயும் அனுப்பிவிட்டார்கள். அன்றாட வாழ்க்கைக்கு உபயோகமுள்ள எவ்வளவோ அரிய கண்டுபிடிப்பு களையும் தந்துள்ளார்கள். அதுபோல் தத்துவவாதிகள், தங்கள் அறிவினால் மட்டும் சிந்தித்து, வாழ்க்கை, சமுதாயம் இவற்றைப் பற்றி தம்முடைய புதிய கோணத்தில் தத்துவங்களைக் கொடுத்து உள்ளார்கள். இந்த விஞ்ஞான வளர்ச்சியும் தத்துவங்களும் அறிவுத்திறனால் சாதிக்கப்பட்டவை. ஆனால், மனதின் ஆற்றலோ இதையெல்லாம் விஞ்சி நிற்கின்றது. மனதை ஏதாவது ஒரு

பொருளில் ஒருநிலைப்படுத்தி, தங்களுடைய மனோசக்தியை அதிகரித்து, மெஸ்மரிசம், ஹிப்னாடிசம் போன்றவற்றால் பிறருடைய மனதை ஆக்கிரமித்துக்கொள்பவர்களும் உண்டு. இதற்கும் மேலே சிலர், மனோசக்தியால் ஓடுகின்ற கடிகாரத்தை நிறுத்துவார்கள். மிருகத்தை அடக்குவார்கள். கம்பியை வளைத்து விடுவார்கள். பொருள்களை நகர்த்துவார்கள். இப்படிப் பற்பல. உடல் பலமுள்ள மனிதன் பலமில்லாத மனிதனை தன் வசப் படுத்துவது போல பலவீனமான மனமுள்ளவனை மனோ பலமுள்ளவன் வசப்படுத்தி தான் நினைத்தபடியெல்லாம் பொம்மை போல் ஆட்டி வைக்கின்றான். இவையெல்லாம் மனோசக்தியால் (Power of the mind) சாதிக்கப்படுபவை.

மனிதனுடைய உடல், அறிவு போன்றவற்றிற்கு எவ்வளவு கவனம் எடுத்துக்கொள்கிறோமோ, அதைவிட அதிகமாக மனதிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஒருவன் உடல், அறிவு மட்டும் ஆரோக்கியமாக இருந்து மனதினால் பாதிக்கப்பட்டவனாக இருந்தால் அவனால் எதையும் செய்ய முடிவதில்லை. எப்படியென்றால், ஒருவன் கண் பார்வை இழந்தால் கூட மற்ற அங்கங்களைக் கொண்டு அவனால் செயல்பட முடியும். அதுபோல், அறிவற்றவனாக இருந்தாலும்கூட உடல்உழைப்பைக் கொண்டு ஏதாவது செய்ய முடியும். இளவயது முதலே கேட்கும் சக்தியே இழக்கத் தொடங்கினாலும் பீத்தோவன் (Beethoven) உலகின் தலைசிறந்த இசையமைப்பாளர்களுள் ஒருவராகப் போற்றப்பட வில்லையா? ஸ்டீபன் ஹாக்கிங் (Stephan Hawking) என்பவர் தன் கை விரல்களைக் கூட சரிவர அசைக்க முடியாத ஒரு கொடிய நோயால் தாக்கப்பட்டாலும், உலகின் தலைசிறந்த விஞ்ஞானி என்று பெயரெடுக்கவில்லையா?

ஆனால், மனதளவில் ஒருவன் பாதிக்கப்பட்டால், உடல் வலிமை பொருந்தியவனாக இருந்தாலும், புத்திக் கூர்மையில் நிகரற்றவனாக இருந்தாலும், உலகிலேயே மாபெரும் செல்வந்தனாக இருந்தாலும் அவனால் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடிவதில்லை. ஆகவே, இதன் மூலம் மனதிற்கு எவ்வளவு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

**(தொடரும்)**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 114

ஒரு சிறு நாடு. அதில் ஒரு நாள் ஒரு அசரீரியின் குரல் கேட்டது. அது எல்லோர் காதிலும் விழுந்தது. அசரீரி என்ன கூறிற்று என்றால், ''இன்றிலிருந்து பத்தாவது நாளில் இந்த ஊரில் உள்ள நீர் முழுவதும் வற்றிப்போகும். கிணறு, குளம், ஏரி யாவும் வற்றும். ஆகையால், நீரை சேமித்து வையுங்கள். பாத்திரங்களில் சேமித்து வைத்துள்ள நீர் மட்டும் வற்றாது. பத்து பதினைந்து தினங்கள் கழித்து தெய்வச் செயலால் மீண்டும் மழை பொழியும். ஆனால், ஒரு ஆபத்து உள்ளது. அந்த மழை நீரை உட்கொண்டால் பைத்தியம் பிடிக்கும்'' என்று சொல்லி எச்சரித்தது. மக்கள் அனைவரும் இதெல்லாம் பைத்தியக்காரத்தனம் என்று உதாசீனப்படுத்தினர்.

ஒருவர் மட்டும் இதை நம்பி நீரை பாத்திரங்களில் சேமித்து வைத்தார். அசரீரி கூறியதுபோல் எல்லாம் நிகழ்ந்தது. புது நீரும் வந்தது. உட்கொண்ட மக்கள் அனைவரும் பைத்தியம் பிடித்து அலைந்தனர். வினோதமான செயல்பாடுகள் கொண்டு திரிந்தனர். நீரை சேமித்து வைத்த புத்திசாலி மட்டும் நன்றாக இருந்தார். மற்றவர்களைப் பார்த்து பரிதாபப்பட்டார். ஊரே இப்படி ஆகிவிட்டதே என்று துக்கப்பட்டார். ஆனால் என்று ஆயிற்று? பைத்தியமான ஜனங்கள் எல்லோரும் இந்தப் புத்திசாலி மனிதரைப் பைத்தியம் என்று இகழ்ந்தனர். இவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஒன்றும் பயன் இல்லை. அவர்களுடன் சேர்ந்து வாழவும் அவரால் இயலவில்லை. ஊரைவிட்டுச் செல்லவும் மனமில்லை. கடைசியில் வேறு வழியின்றி அவரும் அந்த புதுநீரை உண்டு பைத்தியமாகி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்!

அதுபோல்தான் இந்த உலகமும்! இறைவனுடன் தொடர்பு உள்ளவர்களை புரிந்துகொள்ள முடியாமல் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள். மனைவி, மக்கள், பொருள் என்று இவற்றிலேயே உழன்று வாழும் மக்களுக்கு உயர்ந்த விஷயங்கள் எப்படிப் புரியும்?

# மாலே மணிவண்ணா! - 56

- மகாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

**நான்காம் பாடல்**

புகழப் புகழ புகழ்ச்சி அடங்காதவன் எம்பெருமான். அவனை ஆயிர நாமத்து அண்ணல் என்று வேதம் விளிம்பும். அவன் எல்லாமாக இருக்கிறபடியால் அந்தப் பொருள்களாக அவனைப் புகழுங்காலத்து புகழ்ச்சி, பொருள் பலவாதலின் மேலும் மேலும் திருநாமங்களும் அதிகமாகின்றன.

மூன்றாம் பாடலில் திருமாலின் புகழைத் தோத்திரம் செய்த கடுவன் இளவெயினனார் தம் ஆராமையை வெளிப்படுத்த நான்காம் பாடலால் புகழ்கிறார்.

திருமாலைப் புகழ்பவர் யார்? அப்பெருமானைப் புகழும் தகுதி தனக்கு இல்லை. அதனால், தகுதியில்லையே என்பதற்காக தகுதியற்ற நாங்கள் உன்னைப் புகழ்வதை நிறுத்த மாட்டோம். உன்னுடைய பரிகாசத்துக்கு இடமானாலும் எங்கள் புகழ்ச்சியையும் தக்கோர்கள் புகழ்ச்சியை ஏற்குமாறு போல நீ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ல வருகிறார்.

கடுவன் இளவெயினனார் கூறுவதைக் காண்கிறபோது ஆழ்வார் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. பெரியாழ்வார் திருமொழியில் விஷ்ணு சித்தர் சொல்வதைக் கேட்போம். தூய்ஞானம் நிறைந்த பெரியார் பெரியாழ்வார். இடையறாது நாம ஜெபம் செய்கிறாராம். அவருக்கு நாமஜெபம் செய்யக்கூடிய அளவுக்கு வாக்கு தூய்மையில்லையாம். அதனால், நான் உன்னை வாயால் சொல்ல மாட்டேன். ஆனால், என் நாக்கு நின்னையல்லாமல் வேறொன்றையும் அறியாது; என் நாக்கு எனக்குக் கட்டுப்படவில்லை 'ஏ! தூய்மையற்ற நாக்கே! எம்பெருமான், திருப்பெயரைச் சொல்லும் தகுதி உனக்கு இல்லை' என்று சொல்லிப் பார்த்தேன். அது கேட்காமல் திரும்பத் திரும்ப உன் நாமத்தைச் சொல்லிக் கொண்டேயுள்ளது. நான் அதை நினைத்து பயப்படுகின்றேன். நான்

ஏதோ மூர்க்கத்தனமாக வாதம் பேசுகின்றதாக நினைத்து பெருமானே! நீங்கள் என்னைக் கோபித்தாலும் என் நாக்கை என்னால் கட்டுப்படுத்த இயலாது.

எளிய தூய்மையற்ற பறவையாகிய காக்கையின்வாய் ஒலியையும் நிமித்தமாக இந்த உலகம் ஏற்றுக்கொண்டு போற்றுகிறதல்லவா! அதுபோல், என் வாய்ச் சொல்லும் உன்னால் ஏற்றுக்கொள்ளப்படும் எல்லாவற்றுக்கும் காரணமானவனே! கருடக்கொடியுடையவனே' என்று பெரியாழ்வார் கூறுகிறார்.

*வாக்குத் தூய்மை இலாமையினாலே*
*மாதவா! உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்,*
*நாக்கு நின்னை யல்லால் அறியாது*
*நான் அது அஞ்சுவன்; என்வசம் அன்று;*
*மூர்க்குப் பேசுகின்றான் இவன் என்று*
*முனிவா யேலும் என் நாவினுக்கு ஆற்றேன்,*
*காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்;*
*காரணா! கருளக் கொடியானே!!*

(பெரியாழ்வார் திருமொழி 5:1)

*''நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்*
*நா நமச்சிவாய வே''*

என்ற ஏழாந் திருமுறையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கும் ஆழ்வார் கருத்தை ஒத்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

**(தொடரும்)**

---

ஸ்ரீ ஹரி :

**ஸ்ரீ பிரேமிகவரதன் மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரி**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ பிரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில், அக்டோபர் மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

பிருந்தாவனத்திலுள்ள பனகண்டி எனும் இடத்தில் கௌர்-நிதாய் பிஸிமாவுடன் செய்த லீலைகள் எண்ணிலடங்காதவை. அவர்கள் எப்படி பாதுகைகளைப் பெற்றுக்கொண்டார்கள் என்று பார்த்தோம்.

ப்ரஸன்னதாஸி எனும் ஓர் வங்காள பக்தை ப்ருந்தாவனத்தில் வசித்து வந்தாள். ஒரு நாள் கௌர்-நிதாய் அவள் கனவில் தோன்றினார்கள். அவர்கள் எல்லாவிதமான ஆபரணங்களைத் தரித்திருந்தார்கள். அவளிடம், ''பார்! எங்களிடம் எல்லா ஆபரணங்களும் உள்ளன! கொலுசு மாத்திரம் இல்லை! எங்களுக்கு அதை வாங்கித்தா!'' என்று கேட்டனர். அந்தப் பெண்மணி ஆனந்தத்தில் திக்குமுக்காடி போனாள். அவர்களுக்குத் தங்க கொலுசுகளையும் வாங்கிக் கொடுத்தாள்.

பாபாஜி ஒருவர் பிஸிமாவுக்கு உதவிய வண்ணம் கௌர்-நிதாயிக்கு சேவை புரிந்து வந்தார். ஒரு இரவு எல்லா தங்க-ஆபரணங்களை எடுத்துக்கொண்டு அவர் ஓடிவிட்டார். மறுநாள் காலையில் கதவை திறந்து பிஸிமா, கௌர்-நிதாய் மீது ஒரு ஆபரணம் கூட இல்லாததைக் கண்டு திடுக்கிட்டாள். மிகவும் வேதனையில் அவள் வராந்தாவில் அமர்ந்துவிட்டாள். அப்பொழுது சற்றே மயக்கம் போன்ற ஒரு நிலையில் அவள் கௌர்-நிதாயிடம் கேட்டாள் - ''உங்கள் ஆபரணங்களை எடுத்துச் சென்றது யார் என்று என்னிடம் சொல்வீர்களா?'' என்று.

''அம்மா! எங்களுக்கு சேவை செய்து வந்த பாபாஜி மிகவும் ஏழை. நாங்கள் எங்கள் ஆபரணங்களை அவருக்கு கொடுத்து விட்டோம், ஏனென்றால், அவர் எங்களுக்கு நிறைய திறட்டுப்பால் அளித்திருக்கிறார். அவரை ஒன்றும் சொல்லாதே!'' என்று கௌர்-நிதாய் கூறினர். இவ்வாறு கூறிய அவர்களுக்கு பிஸிமா என்ன பதில்தான் சொல்வாள்? மௌனமாகவே இருந்துவிட்டாள். அவளால் வேறு ஆபரணங்கள் வாங்க முடியவில்லை. அவள் சிரித்தவாறே, ''உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படியே

செய்யுங்கள். யாருக்கு வேண்டுமானாலும் உங்கள் நகைகளைத் தந்துவிடுங்கள். எனக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். உங்களுக்கு மீண்டும் நகைகள் வேண்டுமானால், நீங்கள் எப்படியாவது யாரிடமிருந்தாவது அவைகளைப் பெற்றுவிடுவீர்கள்'' என்று கூறினாள்.

ஒருமுறை, கௌர்-நிதாய் பிஸிமாவின் கனவில் தோன்றி, ''அம்மா! நாம் வ்ரஜ-பரிக்ரமா (வ்ரஜ தேசத்தை வலம் வருதல்) செல்வோம்!'' என்று கூறினர். மறுநாளே, பிஸிமா கௌர்-நிதாயியை ஒரு பல்லக்கில் அமர்த்தி வ்ரஜத்தை வலம் வர தொடங்கினாள். உதவிக்கு மதுராதாஸர் மற்றும் விஷ்ணுதாஸர் என்ற இரு வைஷ்ணவர்களும் சென்றனர். மதுரா நகரத்தை அடைந்தபோது, பிஸிமாவும் விஷ்ணுதாஸரும் சில சாமான்களை வாங்குவதற்காக நகரத்தினுள் சென்றுவிட்டனர். மதுராதாஸரும் பல்லக்கும் பின் தங்கிவிட்டன. அப்பொழுது சில ஆங்கிலேய காவல்காரர்கள் அங்கு வந்தனர். பல்லக்கு சிவப்புநிற துணியால் மூடியிருப்பதைக் கண்ட அவர்களின் ஆவல் தூண்டப்பட்டது. அவர்களில் ஒருவன், ''இதனுள்ளே என்ன இருக்கிறது?'' என்று விசாரித்தான். ''பகவான்'' என்று மதுராதாஸர் பதிலுரைத்தார்.

''எங்களுக்குக் காண்பியுங்கள்!'' என்றனர் காவலதிகாரிகள். மதுராதாஸருக்கு அவர்கள் கௌர்-நிதாயிக்கு ஏதாவது தீங்கு விளைவித்துவிட போகின்றார்களே என்ற அச்சம் ஏற்பட்டது. அவர், ''ஐயா! இது அவர்களின் தரிசனத்திற்கு ஆன நேரம் இல்லை'' என்று மிகவும் பணிவாகக் கூறினார்.

ஆனால் காவலதிகாரிகள், அவர் கூறியதை ஏற்காமல், தங்கள் அதிகாரத்தை பயன்படுத்த ஆரம்பித்தார்கள். அப்பொழுது, மின்னல் போன்ற ஒரு பேரொளி பல்லக்கிலிருந்து தொன்றி அவர்கள் கண்களை கூசச் செய்தது. அவர்கள் அலறியவாரே அங்கிருந்து ஓடி சென்றுவிட்டனர்.

மதுராதாஸர், நடந்த ஸம்பவத்தை பிஸிமாவிடம் கூறினார். அதற்கு பிஸிமா, ''என் குழந்தைகள் இப்பொழுது தங்களையே பாதுகாத்துக்கொள்ள தெரிந்துகொண்டுவிட்டார்கள். நல்லது! இனி நான் அவர்களின் பாதுகாப்பைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை'' என்று கூறினாள்.

**(தொடரும்)**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 140

ராஜயோகத்தின் லக்ஷியம் அத்வைதமே. ராஜயோகத்தில் ஸஹஸ்ராரம்தான் ஆத்மஸ்தானம் என்று சொல்வதுண்டு. ஆனால், உண்மையில் ராஜயோகத்திலும் ஹ்ருதயமே ஆத்மஸ்தானமாகும்.

கபீர்தாஸ் என்றொரு மிகப்பெரிய மகான் இருந்தார். அவருடைய மகன் கமாலுடன் அவர் சேர்ந்து ஸ்ரீ ராமநவமி கொண்டாடுவதற்காக பண்டங்களை ஒரு வீட்டில் கன்னம் வைத்து திருடினார். இதில், உள்ளே சென்ற கமாலால் வெளியே வர முடியவில்லை. கமாலின் ஆலோசனைப்படி, ''ராமநவமி கொண்டாடுவது எக்காரணம் கொண்டும் தடைபடலாகாது'' என்று கருதி, கமாலின் கழுத்தை அறுத்து எடுத்து சென்றுவிட்டார் கபீர். தலையில்லா முண்டத்தை கொத்தவால் (போலீஸ்) அடையாளம் காணும் பொருட்டு, ஒரு மரத்தில் தொங்கவிட்டு இருந்தனர். அவ்வழியே கபீர், அன்பர்களுடன் 'ராம' நாம பஜனை செய்து வர, பஜனைக்கேற்ப, தலையில்லா முண்டம் கரத்தாளம் போட்டது. ஹ்ருதயம், ஆத்மஸ்தானமானபடியாலே இது சாத்தியமாயிற்று. இதை பகவான் ரமண மஹரிஷிகள் மேற்கோள் காட்டுவதுண்டு.

பிற சாதனைகளைக் காட்டிலும், ராஜயோகத்தில் ஏற்படும் சாதனையினால் வரும் வலி மற்றும் வேதனை என்பது அதிகம். அதனாலேயே குறிப்பாக முந்தைய பாட்டில், ''நின்னெறி எரித்து'' எனும் பதம் ராஜயோக சாதனையைப் பற்றி சொல்வதாக கூறப்பட்டது. பொதுவாகச் சாதனை பழகுபவர்கள், ஆசனம் ஒன்றை நன்கு போட்டுப் பழகவேண்டும். குறிப்பாக, யம, நியமங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு ராஜயோக சாதகர் ப்ராணாயாமம் செய்யும் முன்னர் ஒரு ஆசனத்தில் சித்தி பெறுவது அவசியம்.

ஆசனத்தில் ஒருவர் நிமிர்ந்து உட்கார்ந்து பழகுவாரே எனில் அவருடைய ப்ராணனானது சீராக செல்லும். இது சாதனைக்கு மிகவும் அவசியம். ஏனெனில், ப்ராணனின் உற்பத்தி ஸ்தானமும் மனதின் உற்பத்தி ஸ்தானமும் ஒன்றே! யாரால் மனதை அடக்க

முடியவில்லையோ அவர்கள் ப்ராணனை அடக்கிப் பழகுவாரே எனில், மனது வசப்படும். Easy Chair-ல் அமர்ந்துகொண்டோ, சுவரில் சாய்ந்துகொண்டோ ஒருவர் ஜபம், த்யானம் பழகுவாரே எனில், அவருடைய ப்ராணனுடைய ஓட்டம் பலவிதத்திலும் தடைப்படும். இதனால், மனது ஏகாக்கிரமாகாது. ஏகாக்கிரம் அடையாத மனதில்தான் சாதனை பலிக்காது. ஏகாக்கிரமடைந்த மனதில் தியானம் சுலபத்தில் கைகூடும். நன்கு தியானம் பண்ணுவோர், எப்பொழுதும் நிமிர்ந்தே உட்காருவர். ப்ராணணின் ஓட்டம் சீர்பட்டுள்ளது என்பதே இதன் அடையாளம்.

ராஜயோகத்தில் கும்பகத்திற்கு முன் செய்யப்படுவது 'நாடிசுத்தி' எனப்படும் மூச்சுப்பயிற்சி ஆகும். நாசியின் இடது வழியாக மூச்சு சென்றுவரின் ப்ராணன் இடகலை வழியாக சென்று வருகிறது என்பர். அதே ப்ராணன் வலது நாசி வழியாக சென்றுவரின், பிங்கலையில் ஓடுவதாக சொல்வர். சாதாரணமாக, அனைத்து மக்களுக்கும் ப்ராணனானது இடகலையிலும், பிங்கலையிலும் மாறி மாறி ஓடி வரும். ஆனால் 'நாடிசுத்தி எனும் மூச்சுப்பயிற்சியை ஒருவர் முறையாக ஆசனசித்தியுடன், யம, நியமங்களுடன் பழகுவாரே எனில், அவருக்கு ப்ராணனானது பிங்கலை வழியாகவே தொடர்ந்து ஓட ஆரம்பித்துவிடும்.

ப்ராணன் இப்படி வலது நாசி வழியாகவே சென்றுவரின், அது சாதனைக்கு மிக அனுகூலம். இப்படி பிங்கலையில் சுவாசம் சென்று வருவோருக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஆத்மானுபவம் அடையக்கூடிய ஒன்றுதான் என்று தோன்றும். அவர்களுக்கு சோம்பேறித்தனம் அடிபட்டுவிடும். எந்தவொரு காரியத்தையும் அடுத்த நாளைக்கென்று தள்ளிப்போட மாட்டார். எந்தவொரு காரியத்தில் இறங்கினாலும் அவர்களுக்கு அதில் ஒரு தெளிவு இருக்கும். காரியத்தையும் விரைவில் முடித்துவிடுவர்.

இப்படி ப்ராணன் பிங்கலையில் ஓடும் காலத்தில் மனதை ப்ராணனில் ஒடுக்கிவிட முடியும். இப்படி மனதானது ப்ராணனில் ஒடுங்குமே எனில், உடம்பைப் பற்றிய சிந்தனை அறவே வராது போய்விடும். தேகத்தைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றி செய்யப்படும் தியானமே மிகவும் உயர்ந்தது.

**(தொடரும்)**

# செய்திகள்

### செப்டம்பர் 26-ஆம் தேதி முதல்

ஜகத்குரு ஸ்ரீ பகவத்நாம போதேந்த்ர ஸ்வாமிகள் மஹாஸமாதி அடைந்து எழுந்தருளியிருக்கும் அதிஷ்டானமுள்ள ப்ருந்தாவன க்ஷேத்ரமாகிய கோவிந்தபுரத்தில், சைதன்ய குடீரத்தில், அகண்ட ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

### அக்டோபர் 4-ஆம் தேதி

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தூத்துக்குடி மேலச்சண்முகபுரம், திரு. சிதம்பரம்-திருமதி வசந்தா அவர்கள் இல்லத்தில் அகண்ட ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது.

### அக்டோபர் 5-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சேலம் நாமத்வாருக்கு விஜயம் செய்து ஏகாதசி மற்றும் நாம மஹிமை பற்றி அருளுரை வழங்கினார்கள்.

### அக்டோபர் 6-ஆம் தேதி

திருப்பதி ஸ்ரீநிவாஸப் பெருமாள், கலியுக வரதனாய் அவதரித்த சிறப்புடைய புனிதமான புரட்டாசி மாதத்தில், தேசமுழுவதும் உள்ள பக்தர்கள் அவரைக் கொண்டாடுவதில் ஆனந்தம் அடைவர். கண்கண்ட தெய்வமான நமது மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸப் பெருமாளை ஏராளமான பக்தர்கள் இம்மாதத்தில் தரிசனம் செய்வதும் வழக்கம். இம்முறை நமது குருநாதரின் திருவுள்ளப்படி பல பக்தர்கள் துளசி மாலை அணிந்து, மஞ்சள் உடை அணிந்து பெருமாளைக்குறித்து விரதம் இருந்து வருகின்றனர். விரத முடிவில் மஹாரண்யம் கோவிலில் மாவிளக்கு ஏற்றி வழிபடுகின்றனர். இந்த ஆண்டு மிகச்சிறப்பாக 6/10/07 புரட்டாசி சனிக்கிழமை அன்று கோவிலைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலிருந்தும் பக்தர்கள் கூடி ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு பால்குட அபிஷேகம் செய்தனர். ஆயிரத்துக்கும்

மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்ட இத்திருவிழாவில் சென்னை கேந்திராவைச் சேர்ந்த திரு. T.S. ராமச்சந்திரன் அவர்கள் நாம மஹிமையைப் பற்றி பேசினார்கள். நிகழ்ச்சியில் வல்லரையைச் சேர்ந்த திரு. நீலகண்டன் மற்றும் கருணாகரச்சேரி திரு. பெருமாள் ஆகியோர் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் அருளால் தங்கள் வாழ்க்கையில் நடந்த மயிர் கூச்செறியும் அதிசயங்களை, பக்தர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தனர். கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் செய்யப்பட்டது.

அன்று மாலை ஸ்ரீ உத்ஸவர் எழுந்தருளி, கொளத்தூர், வல்லரை, குண்டுபெரும்பேடு, நாவலூர், வெங்காடு, இரும்பேடு, மேட்டுக்கொளத்தூர், கருணாகரச்சேரி ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தார். ஏராளமான மக்கள் பெருமாளை தரிசனம் செய்தனர். புரட்டாசி முதல் சனிக்கிழமை பெருமாள் மலைப்பட்டு கிராமத்திற்கும் இரண்டாவது வாரம் மாஹாண்யம் கிராமத்திற்கும், நான்காவது வாரம் சேத்துப்பட்டு, மணிமங்கலம் கிராமங்களுக்கும் எழுந்தருளினார்.

**அக்டோபர் 6-ஆம் தேதி**

பெருமாள்பட்டு ஸ்ரீ பாண்டுரங்கன் கோயிலிலும் அம்பத்தூர், கிருஷ்ணாபுரம் ஸ்ரீமத் சசிகலா ராமசாமி அவர்கள் இல்லத்திலும் அம்பத்தூர், திருவெங்கடா நகர் 2வது பிரதான சாலை, பேராசிரியர் சேஷாத்ரிநாதன் அவர்கள் இல்லத்திலும் நாமகீர்த்தன ஸத்சங்கம் நடைபெற்றது.

**அக்டோபர் 7-ஆம் தேதி**

வேலூர், ஓட்டேரி, ஆரணி ரோடு, பிரியா மஹாலில், மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வேலூர் சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்த்ரா மற்றும் ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயில், சங்கரன்பாளையம் சார்பில் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு. T.S. ராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டு நாம மஹிமை பற்றி பேசினார். பிறகு ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள்

இதில் கலந்துகொண்டனர். திரு. S. அச்சுதன், ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயிலைச் சேர்ந்த திரு பிரகாஷ் குருக்கள் வேலூர் கேந்த்ரா பக்தர்கள், இதற்கான ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தனர். வேலூர் ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 3 வருடங்களாக ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4-30 முதல் 6 மணி வரை மஹா மந்திர கீர்த்தனம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

**அக்டோபர் 13-ஆம் தேதி**

புள்ளலூர், அருள்மிகு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. நமது கேந்த்ராவைச் சேர்ந்த திரு. R. கேசவன் நாமமஹிமையைப் பற்றி பேசினார். பிறகு ''ஹரே ராம...'' மஹாமந்திரம் கீர்த்தனம் செய்யப்பட்டது. 500க்கும் மேற்பட்டவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திரு. சுப்பிரமணியன், திரு. வேலு மற்றும் புள்ளலூர் பக்தர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிகழ்ச்சியின் போது 25க்கும் மேற்பட்ட கிராம குழந்தைகள் ''ராமநாமம் சொல்வதே...'' பாடல் பாடி ஆடியது எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டது. கடந்த 3 வருடங்களாக இத்திருக்கோயிலில் சனிக்கிழமைதோறும் ''ஹரே ராம...'' மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

**அக்டோபர் 13-ஆம் தேதி**

கோவூர், ஆவடி, திருநின்றவூர் கேந்திரா பக்தர்கள் திருநின்றவூர் ராஜன்குப்பம் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி திருக்கோயிலில் அகண்ட ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் செய்தனர்.

**அக்டோபர் 13-ஆம் தேதி**

சேலம் திரு. கண்ணன், திரு. அமராவதி கண்ணன் அவர்கள் மஹாமந்திர நாமகீர்த்தனம் ஏற்பாடு செய்தனர். 80க்கும் மேற்பட்டவர்கள் இந்த கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர். பேராசியர் கருணாகரன் அவர்கள் நாம மஹிமையைப் பற்றியும் குரு மஹிமையைப் பற்றியும் பேசினார். பிறகு மஹாமந்திர கீர்த்தனம் பாடப்பட்டது. பிறகு நகர்வல நாமகீர்த்தனம் நடைபெற்றது.

### அக்டோபர் 13-ஆம் தேதி

பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை, வெங்கனூர் உடும்பியம் கிராமத்திலுள்ள ஈடன் கார்டன்ஸ் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியில், ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. 1000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு. T.S. ராமச்சந்திரன், திரு வெங்கடேஸ்வரன், இதில் கலந்துகெண்டு மாணவர்களுக்கு (வாழ்க்கையில் முன்னேற்றம்) பற்றிப் பேசினர். பிறகு 'ஹரே ராம...'' மஹாமந்திரம் கீர்த்தனம் செய்யப்பட்டது. மங்களூர் முருகதாஸ் பிரின்ஸ்பால் திரு. ஜோசப் இதில் கலந்துகொண்டனர்.

### அக்டோபர் 21-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன் பெங்களூர் ராமமூர்த்தி நகர், NRI Layout, கல்கரேயில் உள்ள ஸ்ரீ சுந்தர ஹனுமான் திருக்கோயில் வளாகத்தில், வேத வியாச புராண பாடசாலை கட்டும் துவக்கப் பணிகளுக்கான ''பூமி பூஜை'' காலை 9 மணி முதல் 10 மணி வரை ''ஹரே ராம...'' நாமகீர்த்தனத்துடன் நடைபெற்றது. 200க்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

### அக்டோபர் 21-ஆம் தேதி

மங்களூர் சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்த்ரா சார்பில் ''ஹரே ராம..'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை மங்களூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை நடைபெற்றது. சுமார் 250 பேர் இதில் கலந்துகொண்டு மஹாமந்திர கீர்த்தனம் செய்தனர். சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு R. முரளி நாம மஹிமைப் பற்றி பேசினார். திரு. R. கேசவன், S. பாலகிருஷ்ணன், S. ஹரிஹரன், S. வசந்தராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். மங்களூர் திரு முருகதாஸ், திரு ரமேஷ் மற்றும் மங்களூர் பக்தர்கள் ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்தனர்.

## பெரியகுளம்

| | | |
|---|---|---|
| 28-9-07 | மாலை 6 - 8 நாம கீர்த்தனம் | தேனி, ஸ்ரீ கணேச கந்த பெருமாள் திருக்கோயில், தியான மண்டபம் |
| 2-10-07 | காலை 9-12 நாம கீர்த்தனம் | பெரியகுளம், ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயில் |
| 3-10-07 | மாலை 6-8 2வது நாம கீர்த்தன ஸத்ஸங்கம் | அல்லி நகரம், ஸ்ரீமத் ஆஞ்சநேயர் திருக்கோயில் |
| 9-10-07 10-10-07 | மாலை 6.30 - 8 நாமகீர்த்தன ஸத்சங்கம் | வடுகப்பட்டி ஸ்ரீ கரடிமான் சக்தி விநாயகர் ஸ்ரீ பஞ்சமூர்த்தி கணபதி திருக்கோயில் |
| 13-10-07 | மாலை 6 - 8 நாமகீர்த்தன ஸத்சங்கம் | வாழப்பட்டி, குணசேகரன்கோட்டை ஸ்ரீ பொன் பெருமாள் திருக்கோயில் |
| 14-10-07 | மாலை 6.30 - 8.00 | சின்னமனூர் அருள்மிகு லக்ஷ்மி |
| 15-10-07 | நாமகீர்த்தன ஸத்ஸங்கம் | நாராயண பெருமாள், திருக்கோயில் |
| 20-10-07 | மாலை 5 - 7 நாமகீர்த்தன ஸத்சங்கம் | வாழப்பட்டி ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயில் |

இந்த நாமகீர்த்தன ஸத்சங்க ஏற்பாடுகளை இரா. ஹரே ராம கிருஷ்ணகுமார், M. காசியம்மாள் மற்றும் பெரியகுள பக்தர்கள் செவ்வனே செய்திருந்தனர்.

### கூடுவாஞ்சேரியில்...

கூடுவாஞ்சேரி மாமரத்து பிள்ளையார் திருக்கோவிலில் ''ஹரே ராம...' நாமகீர்த்தனம் கடந்த 11 மாதங்களாக நடந்து கொண்டு இருக்கிறது. தினமும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை மஹாமந்திர நாம சங்கீர்த்தனம் நடைபெறுகின்றது. முதலில்

உட்கார்ந்து கொண்டு நாமசங்கீர்த்தனம் செய்து விட்டு பிறகு நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டே கோயிலில் வலம் வருகின்றனர்.

**அக்டோபர் 10-ஆம் தேதி**

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாலை சுமார் 3.45 மணிக்கு வேலூருக்கு வருகை தந்தார்கள். வேலூர் தோட்டபாளையம் காட்பாடி ரோடில் உள்ள ஸ்ரீ பத்மாவதி பிரஸ், மற்றும் பத்மினி ஆப்செட் அச்சகம் ஆகியவற்றிற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் விஜயம் செய்தார்கள். திரளான மக்கள் வந்திருந்து ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஆசி பெற்றனர்.

பின்னர், ஆம்பூர் ஆன்மீக பேரவையின் சார்பில் ஆம்பூர் ஸ்ரீ சீனிவாசபெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற ஸத்ஸங்கம், நாமகீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பக்தர்களின் நாம அனுபவங்களை கேட்ட பின்னர் பக்தர்கள் மத்தியில் நாமகீர்த்தனம் செய்தார்கள். பின்னர் இரவு 8 மணிக்கு சிறப்பு மேடையில் அருளுரை வழங்கினார்கள். பின்னர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஆம்பூர் கேந்த்ராவினர் இதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

**தஞ்சாவூர்...**

**அக்டோபர் 12-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை**

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா-மஹிளா மண்டலி தஞ்சாவூர் சார்பில் நவராத்ரியை முன்னிட்டு மஹாமந்திர நாமகீர்த்தனம், கும்மி கோலாட்டத்துடன் பக்தர்களின் இல்லங்களில் கோலாஹலமாக கொண்டாடப்பட்டது.

அக்டோபர் 13-ஆம் தேதி அன்று வல்லம் மாதவபெருமாள் கோவிலில் திருக்கல்யாண உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சுமார் 300 பக்தர்கள் கலந்துகொண்டு மஹாமந்திரம் பாடினர். மஹிளா மண்டலியைச் சேர்ந்த திருமதி சாவித்ரி ராமக்ருஷ்ணன், திருமதி கீதா தண்டபாணி மற்றும் பலர் கடந்த 3 மாதங்களில் தஞ்சாவூர் சுற்றிலும், 28 திருக்கோயில்களில் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன வார வழிபாட்டை துவக்கி இருக்கிறார்கள்.

**அக்டோபர் 13-ஆம் தேதி**

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி மாத கடைசி சனிக்கிழமை கொண்டாடப் பட்டது. அநேக பக்தர்கள் காலையில் திருமாவிளக்கு ஏற்றி வழிபட்டனர். மாலையில் உற்சவர் ஸ்ரீ பக்தகுதூஹலப் பெருமாள் சேத்துப்பட்டு, மணிமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்தார். இரவில் சன்னதி திரும்பும்போது புரட்டாசி மாத உற்சவம் முடிந்து பெருமானை பக்தர்கள் ஏக்கத்துடன் வழியனுப்பி வைத்தது நெகிழ்ச்சியாக இருந்தது.

அக்டோபர் 13-ஆம் தேதி பெரம்பலூர் மாவட்டத்தில் ஈடன் கார்டன் பள்ளியில் மாலை 6.30 முதல் 8.30 வரை ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். சென்னை கேந்த்ராவைச் சேர்ந்த திரு. T.S. ராமச்சந்திரன் திரு. வெங்கடேஸ்வரன் இதில் கலந்து கொண்டு நாம மஹிமைப் பற்றி பேசினார். ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் செய்தனர்.

ஸ்ரீ ஹரி :

**மஹிளா ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ சதக்ரது - 2007**

இடம் : Canara Union Hall<br>8th Main Road, 14th Cross,<br>Malleswaram, Bangalore - 560 003.

தேதி : 18-11-2007 முதல் 25-11-2007 வரை

<u>நிகழ்ச்சி நிரல்</u>

| | | |
|---|---|---|
| 18-11-2007 to 24-11-2007 | 6.30 a.m. - 1.00 p.m. | பாராயணம் |
| | 6.30 p.m. - 8.30 p.m. | உபன்யாசம் |
| | 8.30 p.m. - 10.00 p.m. | நாம ஸங்கீர்த்தனம், டோலோத்ஸவம் |
| 25-11-2007 | - | ராதா கல்யாணம் |

ஸ்ரீ ஹரி :

## அபங்க பஜனை மேளா - 2007

### கார்த்திகை ஏகாதசி வைபவம்

இடம் : **ஸ்ரீ ப்ரேமிக விட்டலர் ஸ்வாமி திருக்கோயில்**
விட்டலாபுரம், கல்பாக்கம் அருகில்,
திருக்கழுக்குன்றம் தாலுகா.

தேதி : 19-11-2007 முதல் 21-11-2007 வரை

20-1-2007 ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்

பாகவத பெருமக்கள் பலர் இதில் கலந்துகொள்கிறார்கள்.

---

சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா
மஹிளா மண்டலி - தஞ்சாவூர் கிளை

உலக அமைதிக்காகவும், எல்லோருக்கும் எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில்

## ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை

இடம் : அண்ணாமலை கல்யாண மண்டபம்
(சுந்தரம் நகர் பேருந்து நிறுத்தம் அருகில்)
மருத்துவ கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 4.

**தேதி : 09.12.2007** **நேரம் : மாலை 5.30 - 7.30**

தொடர்புக்கு :

**திருமதி சாவித்ரி ராமக்ருஷ்ணன்**
11, திருமகள் பள்ளி தெரு, ரிஜிஸ்ட்ரார் காலனி
மருத்துவ கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 004.
Ph : 04362 241376 Cell No.: 9944161539

Sri Hari :

PRANAMS TO THE LOTUS FEET OF

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Better Finanicial Planning lead to Best Prospertiy

We, a leading financial Corporate, provide financial planning
to all HNI/NRI customers regarding child education
Retirement solutions, Tax-Planning & investment with security.

For details contact :

**N.S. MAHESH BABU,** Sr. Consultant Trainer/Financial advisor
# 16, Welders Nagar, Tanjore Road, Trichy - 620 008.
email : maheshbabu49638@iciciprupartner.com
Mobile : 98941 76377 Phone : 0431-6451505

**உலக அமைதிக்காகவும், நன்மைக்காகவும்**
**''ஹரே ராம...'' மஹாமந்திர**
**நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, கடலூர்**

இடம் : டவுன் ஹால், நேதாஜி ரோடு,
மஞ்சக்குப்பம், கடலூர்

தேதி : 03-11-2007, 04-11-2007

நேரம் : மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை

Sri Hari :

**Chaitanya MahaPrabhu Nama Bhiksha Kendra - Mumbai**

17-11-07
6.00 p.m. } : Nasik
Namadwaar opening

18-11-07
6-8 p.m. } : "Hare Rama..." Maha Mantra Nama Kirtan
: Mass Prayer, Mumbai
by Sri K. Sathyanarayanan

Venue : Balvika Hall,
Near Corporation Play Ground,
Chembur, Mumbai

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 03-11-2007<br>04-11-2007 | மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, கடலூர் |
| 05-11-2007 | ஏகாதசி<br>மதுரபுரி ஆஸ்ரமம் |
| 09-11-2007<br>ஐப்பசி ஸ்வாதீ | ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநட்சத்திரம்<br>மதுரபுரி ஆஸ்ரமம் |
| 11-11-2007 முதல்<br>18-11-2007 வரை | ஹைதராபாத் விஜயம் |
| 19-11-2007 முதல்<br>21-11-2007 வரை | பாகவத மேளா - விட்டலாபுரம் |
| 21-11-2007 | ஏகாதசி, மதுரபுரி ஆஸ்ரமம் |
| 30-11-2007<br>மாலை | திருவண்ணாமலை யோகி<br>ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் |
| 1-12-07 முதல்<br>3-12-07 வரை | ஆம்பூர் விஜயம் |
| 5-12-07 | ஏகாதசி |
| 9-12-07 | தஞ்சாவூர்–மஹிளா மண்டல மஹாமந்திர<br>நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை |
| 11-02-2008<br>'வஸந்த பஞ்சமி' | பெங்களூர் கல்கரே ராமமூர்த்தி நகர்<br>NRI லே அவுட்<br>''சுந்தர ஆஞ்சநேயர்''<br>அஷ்டபந்தன கும்பாபிஷேகம் |

Please send your enquiries to

**Dr. A. BHAGYANATHAN**

Personal Secretary to
H.H. Sri Sri Muralidhara Swamiji
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083.
Phone : 044-24895875
E-mail : contact@madhuramurali.org; publications@madhuramurali.org